டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.03.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 215 - Madurai | Online Edition

## சென்னையில் பட்ஜெட்டுக்குப் பிந்தைய கருத்தரங்கில்

# தென்னை விவசாயிகளுடன் கலந்துரையாடிய மத்திய வேளாண் துறை அமைச்சர்



புது தில்லி, மார்ச் 9

மத்திய வேளாண்மை, விவசாயிகள் நலத் துறை மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் 7.3.26 அன்று சென்னையில் தென்னை விவசாயிகள், விஞ்ஞானிகள், விவசாய நிபுணர்கள், தென்னை விவசாயத்துடன் தொடர்புடைய முக்கிய தரப்பினர் ஆகியோருடன் நடைபெற்ற பட்ஜெட்டுக்குப் பிந்தைய முக்கியமான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்த நிகழ்வில், தென்னை விவசாயத்தின் வளர்ச்சி, உற்பத்தியை அதிகரித்தல், தென்னை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து அவர் விவரித்தார்.

நாட்டில் தேங்காய் உற்பத்தி செய்யும் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது என்று மத்திய வேளாண் அமைச்சர் கூறினார்.

இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 1.25 கோடி விவசாயிகள் தேங்காய் சாகுபடியுடன் தொடர்புடையவர்கள் என்றும், சுமார் 3 கோடி மக்களின் வாழ்வாதாரம் தென்னை விவசாயத்தைச் சார்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். தென்னை விவசாயிகள் தற்போது இதில் உற்பத்தித்திறன், நிலைத்தன்மை

ஆகியவற்றைப் பாதிக்கும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள பல தென்னை தோட்டங்கள் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் பழமையானவை என்றும், இதனால் மகசூல் குறைந்து வருவதாகவும் அவர் விளக்கம் அளித்தார். இதுதவிர, வேர் வாடல், வெள்ளை ஈ போன்ற நோய்களும் தென்னை விவசாயத்தை மோசமாக பாதிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். விவசாயிகள் தென்னையின் உற்பத்தித்திறனைப் அதிகரிக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும் ஒருங்கிணைந்த முயற்சிகளையும் புதுமையான தீர்வுகளையும் நாடி, இந்த சவால்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த சவால்களை எதிர்கொள்ள, புதிய, மேம்பட்ட, நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட தென்னை வகைகளை உருவாக்கு வதில் அரசு சிறப்பு கவனம் செலுத்தும் என்று சிவராஜ் சிங் சௌகான் கூறினார். உலக தேங்காய் ஏற்றுமதி சந்தையில் இந்தியா தனது நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில் தேங்காய் உற்பத்தி, தரம் இரண்டையும் அதிகரிப்பதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாயிகள், விஞ்ஞானிகள், நிபுணர்கள் ஆகியோருடன் விரி வான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், இதனால் நடைமுறைக்கு ஏற்ற பயனுள்ள தீர்வுகளை கூட்டாக உருவாக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். விவசாயிகளின் உண்மையான அனுபவங்கள், அவர்களது தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசின் கொள்கை களும் நடவடிக்கைகளும் இருப்பதை உறுதி செய்வதற்கு இதுபோன்ற ஆலோசனைகள் அவசியம் என்று அவர் கூறினார். தென்னை ஊக்குவிப்புத் திட்டம் தில்லி அலுவலகங் களில் மட்டுமல்லாமல் வயல்களிலும் வடிவம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த தென்னை விவசாய ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம், தென்னை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க உதவும் வகையில், உற்பத்தி, பதப் படுத்துதல், ஊடுபயிர் சாகுபடி ஆகியவற்றை அரசு ஊக்குவிக் கும் என்று மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் கூறினார். தென்னை சாகுபடியுடன் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிப்பது தென்னை விவசாயிகளின் பொருளாதார நிலைத்தன்மையை கணிசமாக மேம்படுத்துவதோடு, விவசாயிகளுக்கு கூடுதல் வருமான ஆதாரங்களையும் வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

தென்னை விவசாயிகள் சிறந்த வசதிகளையும் வலுவான நிறுவன ஆதரவையும் பெறுவதை உறுதி செய்வதில் அரசு உறுதியுடன் செயல்படுவதாக சிவராஜ் சிங் சௌகான் மேலும் கூறினார். பழைய மற்றும் மகசூல் இல்லாத தோட்டங்களுக்குப் பதிலாக புதிய தோட்டங்களை ஏற்படுத்துதல், உயர்தர நாற்றங்கால்களை உருவாக்குதல், நவீன பதப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துவது, தேங்காய் சார்ந்த பொருட்களில் மதிப்பு கூட்டலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் ஆகியவை இதில் அடங்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

தென்னை ஊக்குவிப்புத் திட்டத்தை இறுதி செய்வதற்காக விவசாயிகளுடனும் மாநில அரசுகளுடனும் ஆலோசனைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். இந்த விவாதங்கள் முடிந்ததும், தென்னை ஊக்குவிப்பு வாரியம் தொடர்பான விரிவான கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். வரும் ஆண்டுகளில் தென்னை விவசாய வளர்ச்சிக்கு வழிகாட்டவும் ஆதரவளிக்கவும், வலுவான சூழலை உருவாக்குவதே இந்த கட்டமைப்பின் நோக்கமாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார். நாடு முழுவதும் உள்ள தென்னை விவசாயிகளுக்கு இந்த முயற்சி குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும் என்று சௌகான் நம்பிக்கை தெரிவித்தார். குறிப்பாக தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 28 சதவீத விவசாயிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் போது, தென்னை வளர்ச்சி வாரியம் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியை அமைச்சர் திறந்து வைத்தார். தென்னை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான நூல்களையும் நிகழ்ச்சியில் அமைச்சர் வெளியிட்டார். தாயின் பெயரில் ஒரு மரக்கன்று நடும் இயக்கத்தின் ஒரு பகுதியாக ஒரு தென்னங்கன்றை அமைச்சர் நாட்டுவைத்தார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை மற்றும் விவசாயத்துறை இணைச் செயலாளர் தெபோரா இனிதா, தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் செயலாளர் வி.தட்சிணாமூர்த்தி, கர்நாடக அரசின் தோட்டக்கலைத்துறை செயலாளர் ஆர் கிரீஷ், ஆந்திர பிரதேச அரசின், தோட்டக்கலைத்துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் சி.பி. ஹரிநாத ரெட்டி, புதுச்சேரி வேளாண் துறையின் கூடுதல் இயக்குநர் ஜெயசங்கர் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் டாக்டர் பிரபாத் குமார் உள்ளிட்டோரும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வேளாண்மைத் துறை அதிகாரிக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கி கௌரவிப்பு

பெரம்பலூர், மார்ச் 9

பெரம்பலூர் மாவட்டம், அக்ரி டாக்டர் த.ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனராக (தரக்கட்டுப்பாடு) பணியாற்றும் இவர், மதுரையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பிஎஸ்சி அக்ரிகல்ச்சர் மற்றும் எம் எஸ் சி அக்ரிகல்ச்சர் படிப்பை முடித்த பிறகு வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மை கல்லூரியிலும் பணிபுரிந்துள்ளார்,



தனியார் வேளாண்மை கல்லூரியில் உதவி பேராசிரியர் மற்றும் விடுதி காப்பாளர், சுகர் மில்லில் கரும்பு அலுவலர், ஏ எம் இ பவுண்டேசனில் பண்ணை மேலாளர் மற்றும் பயிற்சி பயிற்றுனர் மற்றும் என் ஜி ஓ வில் உதவி பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் போன்ற நிறுவனங்களில் பணி புரிந்துள்ளார்.

அதன் பின் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடைபெற்ற வேளாண்மை அலுவலர் தேர்வில் தேர்ச்சி பெற்று, வேளாண்மை அலுவலர், விதை சான்று அலுவலர், வேளாண்மை அலுவலர், (வேளாண்மை வணிகம்) பணிபுரிந்து பதவி உயர்வின் வழியே வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அரியலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது பணிபுரிந்து வருகிறார்.

இவர் வேளாண்மை கல்லூரிகளிலும் ஆராய்ச்சி நிலையங் களும் பணி புரிந்த காலத்தில் போட்டித் தேர்வுகளுக்காக புத்தகங்கள் எழுத ஆரம்பித்து இதுவரை நூற்றுக்கணக்கான புத்தகங்களை எழுதி உள்ளார்.

குறிப்பாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் பள்ளி மாணவர்களுக்காகவும் புத்தகம் எழுதி உள்ளார். மேலும், வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் போன்ற போட்டி தேர்வுகளுக்காக புத்தகங்களை எழுதி உள்ளார். இவர் இதுவரை 26க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேசிய அளவில் அவார்டுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் பெற்றுள்ளார், குறிப்பாக பல சமூக சாதனையாளர் விருதுகள், இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை டாக்டர் பேராசிரியர் எம் எஸ் சுவாமிநாதன் வாழ்நாள் சாதனையாளர் விருது, நார்மன் பர் லாக் இளம் விஞ்ஞானி விருது, டாக்டர் வர்க்கீஸ் குரியன் பெஸ்ட் எக்ஸ்டென்ன் ஒர்க்கர் விருது, ப்ரொபனல் லீடர்ஷிப் விருது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து பெஸ்ட் ஒர்க்கர் விருது, கல்வி மாமேதை விருது, போன்ற விருதுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வாங்கி உள்ளார். 50க்கும் மேற்பட்ட பயிற்சி மற்றும் கருத்தரங்களில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார். விவசாயிகள் பயன்படும் வகையில் பல்வேறுபட்ட வேளாண்மை தொழில் நுணுக்க செய்திகளை 75 க்கு மேல் யூ டூப் மூலம் போட்டு உள்ளார். இவரின் செயலை அறிந்து 2025 ஆம் ஆண்டு உலக மனித அமைதி பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா சென்னையில் நடைபெற்ற, விழாவின் போது இவருக்கு வேளாண்மையில் கௌரவ டாக்டர் பட்டம் சான்றிதழ் மற்றும் மெடல் கொடுத்து கௌரவித்தது. மேற்படி விருது, அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை மூலம் அறம் விருதுகள் 2026 அக்ரி டாக்டர் த ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு, அவர் செய்த செயல்கள் மற்றும் சாதனைகளை பாராட்டி திரைப்பட இயக்குனர் கே.பாக்யராஜ், நீதியின் குரல் சி.ஆர்.பாஸ்கர் இணைந்து வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கினார்கள்.

8.3.26 அன்று மகளிர் சட்ட உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் மற்றும் மக்கள் சட்ட உரிமைகள் சமூக சேவை இயக்கம் நடத்திய செந்தமிழ் விருதுகள் 2026 வழங்கும் விழாவில், கௌரவித்து மெடலுடன் வாழ்நாள் சாதனையாளர் விருதும் சான்றிதழும் கொடுத்து பாராட்டினார்கள். அது மட்டுமல்லாமல் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக அழைத்ததின் பேரில் அனைவருக்கும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் பாராட்டு சான்றிதழ்கள் விருதுகள் வழங்கினார்.

# மகளிர் தின விழா மற்றும் தேனி வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 9

வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள தேனி வளர்ப்பு துறையின் மூலம் மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விஞ்ஞான முறையில் தேனீ வளர்ப்பு பற்றிய பயிற்சி கோவை மாவட்டம், காரமடை வட்டாரத்தில் உள்ள செங்குட்டை மலை கிராமத்தில் மகளிர் தினமான 8.3.26 அன்று நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் நமது வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் கோமதி, முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறுப்பு கலந்து கொண்டு மகளிர் தின முக்கியத்துவம் பற்றியும் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் மகளிருக்கு தரப்படும் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் மற்றும் பண்ணை மகளிருக்கான உள்ள திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் முனைவர் சுவாமிநாதன், தேனி வளர்ப்புத் துறையில் இருந்து கலந்து கொண்டு விஞ்ஞான முறையில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம் பற்றியும் ப்ரீத்தா, தேனியில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்படும் பொருட்கள் பற்றியும் எடுத்துரைத்தார். இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக மலைவாழ் மக்களுக்கு 40க்கும் மேற்பட்ட தேன் காலணிகள் மற்றும் பெட்டிகள் வழங்கப்பட்டது.

இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பொன்மணி செங்குட்டை கிராமத்தைச் சேர்ந்த தொழில் முனைவோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## நிலைத்தன்மை கொண்ட வேளாண்மைக்கான பொறியியல் தீர்வுகள் என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு

கோயம்புத்தூர், மார்ச் 9

எதிர்காலத்திற்கான நிலைத்தன்மை கொண்ட வேளாண்மையை உருவாக்கும் பொறியியல் (Engineering Agriculture for Resilient Future) என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கம், கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அண்ணா அரங்கில் சிறப்பாக தொடங்கப்பட்டது. இக்கருத்தரங்கில் விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு நிலைத்தன்மை மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கான புதுமையான பொறியியல் தீர்வுகள் குறித்து கலந்துரையாடினர்.




துவக்க விழாவானது சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பங்கேற்பாளர்களை வரவேற்று தொடங்கியது. தமிழ்நாடு வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு குழுமத்தின் (TNAPEx), மேலாண்மை இயக்குநரும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான முனைவர் கே. அழகு சுந்தரம் தொடக்க உரையை வழங்கி, வேளாண்மை பொறியியல் தொழில்நுட்பங்கள் வேளாண் மதிப்புச்சங்கிலியை வலுப்படுத்து வதிலும், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மையை மேம்படுத்து வதிலும், வேளாண் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிப்பதிலும் முக்கிய பங்காற்றுவதை எடுத்துரைத்தார். மேலும், நவீன தொழில் நுட்பங்கள், திறமையான செயலாக்க முறைகள் மற்றும் புதுமையான பொறியியல் தீர்வுகளை பயன்படுத்துவதன் மூலம் வேளாண் பொருட்களின் நிலைத்தன்மை, தரம் மற்றும் உலகளாவிய போட்டித் திறனை உயர்த்த முடியும் என அவர் குறிப்பிட்டார். முக்கிய உரையை ரெனைய் சன்ஸ் பவர் புரொடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தின் இயக்குநரும் செயலாளருமான முனைவர் ஏ.ராஜ்குமார் வழங்கினார்.

வேளாண்மையில் உருவாகும் புதிய சவால்களை சமாளிக்க தொழில்நுட்ப முன்னேற் றங்கள், இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில் துறை சார்ந்த புதுமைகள் மிக அவசியம் என்பதை அவர் தனது உரையில் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மைர் முனைவர் பெ.ராஜ்குமார் தனது உரையில் நவீன வேளாண் மையில் பொறியியல் துறையின் முக்கியத்துவத்தை விளக்கி, எதிர்கால வேளாண் சவால்களை சமாளிக்க கூட்டு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் அவசியம் என வலியுறுத்தினார்.

இந்த தொடக்க நிகழ்வில் கோயம்புத்தூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் ந வெங்கடேச பழனிசாமி, தோட்டக்கலை கல்லூரியின் முதன் மையர் முனைவர் வெங்கடேசன், முதுநிலைப் படிப்புகள் (SPGS) முதன்மையர் முனைவர் சி.பாபு மற்றும் மாணவர் நல மையத்தின் (CSW) முதன்மையர் முனைவர் ஜே.ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கல்விமற்றும் ஆராய்ச்சி துறைகளில் துறை சார் ஒத்துழைப்பையும் புதுமைகளையும் ஊக்குவித்தனர். இந்த தொடக்க விழாவில் மாநாட்டு நினைவிதழ் (Souvenir) சிறப்பு விருந்தினர்களால் வெளியிடப்பட்டது. மாநாட்டு ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பு செயலாளர்களாக முனைவர் பாலாஜி கண்ணன் மற்றும் முனைவர் தியாகராஜன், இணை ஒருங்கிணைப்பு செயலாளர்களாக முனைவர் அருணா தேவி மற்றும் முனைவர் மோகன் குமார் ஒருங்கிணைத்தனர்.



# மல்பெரி மற்றும் பட்டுப்புழுவின் வகைகளை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, மார்ச் 9

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழகம் சமயபுரம், வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் ஊரக வேளாண் பயிற்சி அனுபவத்தில் தாங்கள் பயின்று வந்ததை விவசாயிகளுடன் பகிரிந்து கொண்டனர்.

மல்பெரி மற்றும் பட்டுப்புழுவின் வகைகள் என்னும் தலைப்பினை விவரித்து கூறினர். மல்பெரியை உலகில் உற்பத்தி செய்யப்படும் வணிகப் பட்டுகளில் பெரும்பகுதி இந்த வகையிலிருந்து வருகிறது. இந்தியாவில் முக்கிய மல்பெரி பட்டு வளர்க்கபடும் மாநிலங்கள் கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு என்று கூறினர்.

பட்டுப்புழுவின் வகைகளில் டசார், எரி மற்றும் முகா என்று மூன்று வகையான பட்டுப்புழுவினை விவசாயிகளுக்கு புரியும் வகையில் விவரித்தனர்.

**டசார் :** செம்பு நிறத்தில், கரடுமுரடான பட்டு, முக்கியமான அலங்காரம் மற்றும் உட்புறங்களுக்குப் பயன்படுத்தபடுகிறது.

**எரி :** இது முக்கியமான ஆமணக்கு இலைகளை உண்கிறது.

முகா : அதிக மதிப்புள்ள தயாரிப்பான முகா பட்டு புடவைகள், சதர்கள். அசாம் மாநிலத்தின் பெருமையாக இது விளங்குகிறது. இவை அனைத்தையும் எடுத்துரைத்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# லாபகரமான மூலிகை - அஸ்வ கந்தா சாகுபடி

கரும்பு, மிளகாய், மஞ்சள் போன்ற பயிர்களுக்கு இணையான லாபம் தரக்கூடிய பயிராக அஸ்வகாந்தா மூலிகை உள்ளது. இதனுடைய வேர் பகுதி மருத்தவத்திற்கு மிகவும் ஏற்றதாகும். விவசாயிகள் இந்த வேரினை தரம் வாரியாக பிரித்து மதிப்புக்கூட்டப்பட்டு விற்பனை செய்ய முடியும்.





**அஸ்வகாந்தா என்ற பெயருக்கு என்ன அர்த்தம்?**

அஸ்வகாந்தா என்ற பெயர் சமஸ்கிருத சொல்லாகும் அஸ்வா என்பது குதிரை என்றும் 'காந்தா'உ என்பது மணம் வாசனை என்ற பொருளை கொண் டிருப்பது தான். அதாவது வலுவான குதிரை போன்ற வாசனை கொண் டிருப்பது என்று அர்த்தம். இதனுடைய அறிவியல் பெயர் (WITHANIA SOMNIFERA) ASHWAGANTHA) இதனை அமுக்ரா கிழங்கு எனவும் அழைக்கப்படுகின்றன. இந்திய மருத்துவதுறையில் நீண்ட கால பயன்படுத்தப்பட்டுள்ளதாக தரவுகள் உள்ளன. இந்தியா தான் உலகிலே அஸ்வகாந்தா அதிகமாக உற்பத்தி செய்யும் நாடாகும். உலர்ந்த இலைகள், உலர்ந்த வேர்கள், வேர்தூள், சாறுகள், காப்ஸ்யூல் மற்றும் மாத்திரைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**இரகங்கள் என்னென்ன?**

வல்லப் அஸ்வகாந்தா–1 (V.A-), ஆனந்த அஸ்வகாந்தா ஃ–1, ஆனந்த் விதானியா, ஜவகர் அஸ்வகாந்தா, பிரதாப் போன் றவை வணிக ரீதியாக சாகுபடி செய்ய ஏற்ற ரகங்களாகும்.

**மண் மற்றும் பருவம்**

பொதுவாக மணற்சாரியான பகுதியில் நன்றாக வளரும். மண்ணின் கார அமில நிலை (PH 6.5–7.5) தண்ணீர் தேங்காத நல்ல வடிகால் வசதியுடைய நிலங்கள் மிகவும் சிறந்ததாகும். 20'C – முதல் 25'C வரையிலான வெப்ப நிலை சாகுபடிக்கு ஏற்றதாகும். பருவம் நவம்பர்– டிசம்பர் மாதம் ஏற்ற காலமாகும். 80–90 நாட்களில் நன்கு விளையக்கூடும்.

**விதையளவு**

எக்கருக்கு 4–5 கிலோ விதை தேவைப்படுகிறது.

**இடைவெளி 30X10 செ.மீ அல்லது 30X15 செ.மீ**

விவசாயிகள் நாற்று பாவி நடவு செய்வதை விட கை விதைப்பு (BRODGASTING) செய்வது சாகுபடிக்கான செலவை குறைக்கும்.

**உரமிடுதல்**

பசுந்தாள் உரம், மக்கிய தொழு உரம், மண் புழு உரம் மிகவும் ஏற்றதாகும். வேர் நன்றாக வளர உயிர் உரங்களை இடுவது சிறந்ததாகும். இரசாயன உரங்களை தவிர்ப்பது நல்லது.

**களைக் கட்டுபாடு**

களை களை கட்டுப்படுத்த விதைத்த 15–30வது நாளில் கை யால் களை எடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டு இரசாயன களைக் கொல்லியை பயன்படுத்தக்கூடாது.

**பயிர் பாதுகாப்பு**

பூச்சி / நோய் தாக்குதல் அதிகமாக இருப்பதில்லை. வேர் அழுகல் / வேர் வாடல் நோய்க்கு டி.விரிடி/சூடாமானஸ் தலா 1 கிலோவை தண்ணீரில் கரைத்து வேர் பகுதியில் ஊற்ற வேண்டும். அதே போல புள்ளி வண்டு தாக்குதல் காணப்பட்டால் ஐந்திலை கரைசல் (வேப்பம், நொச்சி, எருக்கு, புங்கம், ஊமத்தை) போன்றவற்றை மாட்டு கோமியத்தில் ஊறவைத்து தெளிக்க வேண்டும்.

**அறுவடை**

பயிர் முதிர்ச்சியான நிலை செடி மஞ்சள் நிறமாக மாறி விடும். விதைத்த 150–170 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். செடிகளை பிடுங்கி ஓரிரு நாட்கள் நிலத்திலேயே உலர்த்தி வைப் பதன் மூலமாக செடியின் இலை தண்டுகளில் உள்ள மருத்துவ குணம் கொண்ட வேதிப் பொருட்கள் வேருக்கு சென்று விடும். இதனால் நமக்கு நல்ல தரமான வேர்கள் கிடைக்கும். வேர்களை நல்ல நீரில் கழுவ வேண்டும். பிறகு வேர்களை வெட்டி பிரிக்க வேண்டும். பழங்களை தனியாக பிரித்தெடுத்து விதை களை காய வைக்க வேண்டும்.

**மதிப்புக் கூட்டப்பட்ட அஸ்வகாந்தா பொருட்கள்**

இந்த வேர்களை காய வைத்து பொடி செய்து தேவையான அளவு டப்பாகளில் அடைத்து விற்பனை செய்யலாம். பிஸ்கட், சாக்லேட், டீத் தூள், ஐஸ்கிரீம் போன்றவற்றில் பயன்படுத்தலாம். நோய் எதிர்ப்பு சக்தி, நரம்புத் தளர்ச்சி, நீரழிவு எதிர்ப்பு, இதய பாது காப்பு, முதுமை எதிர்ப்பு போன்ற நோய்களுக்கு சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவத்தில் பயன்படுத்தப் படுகிறது. இதனுடைய விதைகள் கால்நடை தீவனமாக பயன் படுத்தலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஈகை டவுனில் சர்வதேச மகளிர் தின விழாவில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியம் ஈகை டவுனில் பெண்களுக்கு மரக் கன்றுகள் வழங்கும் மற்றும் மரம் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாணவர்கள் மரங்களை வழங்கினர்.

திருச்சி தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை இறுதி ஆண்டு மாணவர்கள் தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வு நிகழ்வை ஒருங்கிணைத்தனர். 'பெண் களைப் போற்றுவோம், இயற்கையைப் பாதுகாப்போம்' என்ற கருப்பொருளை மையமாக வைத்து இந்த விழா நடைபெற்றது.

**நிகழ்வின் சிறப்பம்சங்கள்**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு** : வீடுகளில் மரம் வளர்ப்பதன் அவசியம், மழைநீர் சேகரிப்பு மற்றும் வீட்டுத் தோட்டங்களின் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் பெண்களுக்கு எடுத்துரைத்தனர்.

**பெண்களின் பங்களிப்பு** : கிராமத்துப் பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் மரம் நடும் நிகழ்வில் கலந்துகொண்டனர். தங்கள் வீடுகளுக்கு வழங்கப் பட்ட கன்றுகளை முறையாக வளர்த்துப் பராமரிப்போம் என அவர்கள் உறுதி அளித்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கொத்தமல்லி மற்றும் மிளகாய் சாகுபடி பயிற்சி



மதுரை, மார்ச் 9

மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தோட்டக்கலைத் துறை, மற்றும் பாக்கு மற்றும் வாசனைப்பயிர்கள் மேம்பாட்டு இயக்குனரகம், கோழிக்கோட்டுடன் இணைந்து கொத்தமல்லி மற்றும் மிளகாய் சாகுபடி பயிற்சி நடத்தினர்.

இந்த பயிற்சியில் வேளாண்மை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ.சந்திரமணி தலைமையேற்று நடத்தினார்கள். அவர்கள் மிளகாய் சாகுபடி விவசாயிகள் ஒரு குழுவாக சேர்ந்து உழவர் உற்பத்தியாளர்கள் மையம் அமைத்து விளை பெருட்களை நிர்ணயம் செய்து அதன் மூலம் விற்பனை செய்யவேண்டும் என எடுத்துரைத்தார். மேலும் மிளகாய் மற்றும் கொத்தமல்லியை மதிப்புக்கூட்டிய பொருட்களாக மாற்றி அதிக விலைக்கு விற்று தொழில்முனைவோராக ஆக வேண்டும் என்றும் விவசாயிகளின் வெற்றி தான் இந்த பயிற்சியின் நோக்கம் என்றும் கூறினார்.

முனைவர் இரா.வேலுசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை விரிவாக்கம் மற்றும் சமூக அறிவியல் துறை வாழ்த்துரை நல்கினார். அவர்கள் பேசும் போது, விவசாயிகள் மிளகாயிள் கலப்பின ஒட்டு ரகத்தினை தேர்வு செய்து அதனை சாகுபடி செய்யும்படியும் மற்றும் கொத்தமல்லியை இலைக்காக வெயில்காலங்களில் பசுமைக்குடில்கள் அமைத்து அதில் சாகுபடி செய்து அதனை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்து அதிக இலாபம் பெறுமாறு கேட்டுக்கொண்டார். அருள் மணி, தோட்டக்கலை உதவி இயக்குனர், கொட்டாம்பட்டி வாழ்த் துரை வழங்கி பேசும் போது மிளகாள் மற்றும் கொத்தமல்லியின் மகத்துவம், பயன்கள் மற்றும் உற்பத்தி செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய உத்திகள் பற்றியும் விவசாயிகளுக்கு வாசனைப் பயிர்களுக்காக தமிழ்நாடு அரசு வழங்கும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த பயிற்சியில் மிளகாள் மற்றும் கொத்தமல்லி சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி கையேட்டினை கல்லூரியின் முதல்வர் வெளியிட்டார். முனைவர் சி.ராஜமாணிக்கம், பேராசிரியர் மற்றும் தலைவர், தோட்டக்கலைத்துறை தமது வரவேற்புரையில் மிளகாய் சாகுபடியில் உயர் தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய வீரிய ஒட்டு இரகங்களை பயன் படுத்தி சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த பயிற்சியில் ஏழு தொழில்நுட்ப உரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. தொழில்நுட்ப உரையில் கொத்தமல்லி சாகுபடி உத்திகள், மிளகாய் மற்றும் கொத்தமல்லியில் நீர்ப்பாசன முறைகள் மற்றும் களைகட்டுப்பாட்டு, நோய் மற்றும் பூச்சிகள் மேலாண்மை பற்றி வல்லுநர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள். இந்த ஒரு நாள் பயிற்சியில் சுமார் 75க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியில் வே.தேவி நன்றியுரை கூறினார்.

# உயிர்ம வேளாண்மையில் களை நிர்வாகம்

இராமநாதபுரம், மார்ச் 9

வேளாண் தொழிலில் பல உயிரி மற்றும் உயிரி அல்லாத காரணிகள் பயிர்களின் விளைச்சலில் இழப்பை ஏற்படுத்துகி ன்றன. அதில் களைச் செடிகளின் பங்கு முக்கியமானதாகும். இக்களைச் செடிகள் பயிர்களுடன் நன்றாக போட்டியிட்டு அவற்றுக்கு கிடைக்க வேண்டிய சத்துக்களை எடுத்துக் கொண்டு விளைச்சலை வெகுவாக குறைக்கின்றன.

### ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாடு முறைகள்

நெற்பயிரில் செலவில் சிக்கனம் மற்றும் லாபகரமான பயிர் விளைச்சல் பெற களை விதைகள் கலப்பில்லாத சான்று பெற்ற விதைகளை உபயோகிக்க வேண்டும். வரப்பு மற்றும் வாய்க் கால்களில் களை வராமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கோடை உழவு செய்து சிறந்த முறையில் நிலத்தை தயார்படுத்த வேண்டும். உரிய பயிரினையும், ரகத்தையும் தேர்வு செய்ய வேண்டும். பயிர் எண்ணிக்கையை பராமரித்தல் வேண்டும். பசுந்தாள் உரப்பயிர்களை ஊடு பயிராக இடுதல், தகுந்த பயிர் சுழற்சியை கடைப்பிடித்தல், ஏற்ற களைக்கட்டுப்பாட்டு கருவி களை பயன்படுத்தல் போன்றவை களைகளை கட்டுப்படுத்தும் முறைகள் ஆகும்.

கோடை உழவு செய்து களைகளின் வேர்கள் கிழங்குகள் மூலம் பரவக்கூடிய களைகளின் பாகங்களை அகற்ற வேண்டும். பயிர் விதைகள் மூலமாக சில களைகள் பரவுவதால் சான்று பெற்ற விதைகளை தேர்ந்தெடுத்து பயிர் செய்வதால் பயிர்கள் விரைவாக வளர்ந்து களைகள் முளைப்பது ஓரளவு தடுக்கப்படுகிறது.

களைகளின் போட்டிப் பயிர்களான பசுந்தாள் உர பயிர்களான அகத்தி, கேசியா போன்ற பயிர்களை பயிரிடுவதன் மூலம் களைகளின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும். பயிர் வளர்ச்சியின் ஆரம்ப காலங்களில் களைகளை கட்டுப்படுத்துவதால் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை. அதிக களைகள் முளைக்கும் பகுதிகளில் பரிந்துரைக்கப்படும் களைக் கொல்லிகளை தெளித்தல் மற்றும் கைகளை எடுப்பது அவசியம்.

களை முளைக்கும் முன் அளிக்கும் களைக்கொல்லிகளில் பின்வரும் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும். தியோ பென்கார்ப் 50 சதவிகிதம் இசி @ 3 கி / எக்டர் (1.5 கிலோ செயல் படு பொருள் / எக்டர்), பியூட்டாக்லோர் 50 சதவிகிதம் இசி @ 2.5 கிலோ / எக்டர் (1.25 கிலோ செயல்படு பொருள் / எக்டர்), ஆக்ஸிஃபுலூரோபென் 4 சதவிகிதம் இசி @ 6 கி / எக்டர் (0.15கி செயல்படு பொருள் / எக்டர்), பென்டிமிதலின் 30 சதவிகிதம் இசி @ 3.75 கிலோ / எக்டர் (0.75 கிலோ செயல்படு பொருள் / எக்டர்) என்ற அளவில் விதை விதைக்கும் நாளிலோ அல்லது விதைத்து 6 நாட்களிலோ தெளிக்க வேண்டும். குதிரைவாலி புல் சிற்றினத்தை கட்டுப்படுத்த சைஹைலோஃபாப் ப்யூடைல் 10 சதவிகிதம் EW @ 0.8 கிலோ / எக்டர் (0.8 கி செயல்படு பொருள் / எக்டர்) என்றளவில் விதை விதைத்து 15-18 நாட்களில் தெளிக்க வேண்டும். அகன்ற இலையுடைய களைச்செடிகள் மற்றும் கோரைகள் அதிகமாய் இருக்கும் இடத்தில் 2-4, டி-சோடியம் உப்பு (ஃபெர் னோக்சேபன் 80 சதவிகிதம் நனையும் தூள்) 1.25 கி/எக்டர் 625 லிட்டர் தண்ணீரில் கரைத்து, அதிக கொள்ளளவு மருந்து தெளிப்பான் கொண்டு தெளித்தல் வேண்டும். இம் முறையை நடவு செய்து 3 வாரங்களுக்குப்பிறகு, களைச் செடிகள் 3-4 இலையுடைய பருவத்தில் இருக்கும் போது தெளிக்க வேண்டும்.

இவ்வாறு, இராமநாதபுரம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், தெரிவித்தார்.

# நெல்லில் ஏற்படும் லட்சுமி நோய் [Rice False Smut] : தமிழ்நாட்டில் நெல் விவசாயிகளுக்கு வளர்ந்து வரும் அச்சுறுத்தல்

அரிசி (Oryza sativa) என்பது உலகம் முழுவதும் மிகவும் முக்கியமான மற்றும் பரிச்சயமான தானிய பயிர்களில் ஒன்றாகும். அரிசியில் காணப்படும் போலி ஸ்மட் (உஸ்டிலா ஜினாய்டியா வைரன்ஸ்) என்பது இந்தியாவில் வரவிருக்கும் ஒரு



பெரிய நோயாகும். போலி ஸ்மட் சமீபத்தில் ஒரு பெரிய அரிசி நோயாக உருவாகி வருகிறது, இது முன்னர் மிகக் குறைவான தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் கருதப் பட்டது. இது பாலியல் மற்றும் பாலினமற்ற இரண்டு வெவ்வேறு நிலைகளில் காணப்படுகிறது, மேலும் இரண்டு வித்திகளும் ஸ்பைக்லெட்டைப் பாதித்து அரிசி தானியத்தின் ஒரு கறை படிந்த உருண்டையை உருவாக்க வழிவகுக்கும்.



## வரலாறு

உஸ்டிலஜினாய்டியா வைரன்ஸ் என்றும் அழைக்கப்படும் (பச்சை ஸ்மட் மற்றும் லட்சுமி நோய் என்று கருதப்படுகிறது) என்ற பூஞ்சையால் ஏற்படும் அரிசியின் போலி ஸ்மட், 1878 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் குக் என்பவரால் முதலில் பதிவாகியுள்ளது.

## நோயின் அறிகுறிகள்

● தனிப்பட்ட நெல் தானியங்கள் மஞ்சள் நிற பழம்தரும் உடல்களாக மாறுதல்.

● மலர் பாகங்களைச் சுற்றியுள்ள வெல்வெட் போன்ற வித்துகளின் வளர்ச்சி.

● பாதிக்கப்பட்ட தானியத்தில் வெல்வெட் போன்ற தோற்றத்துடன் பச்சை நிற ஸ்மட் பந்துகள் இருக்கும்.

● கறைபடிந்த பந்து முதலில் சிறியதாகத் தோன்றி படிப்படியாக 1 செ.மீ அளவு வரை வளரும்.

● இது ஓடுகளுக்கு இடையில் காணப்படும் மற்றும் மலர் பாகங்களைச் சுற்றி இருக்கும்.

● ஒரு பூங்கொத்தில் சில தானியங்கள் மட்டுமே பொதுவாக பாதிக்கப்பட்டு மீதமுள்ளவை இயல்பானவை.

● பூஞ்சை வளர்ச்சி தீவிரமடையும் போது, பூங்கொத்து பந்து வெடித்து ஆரஞ்சு நிறமாக மாறி பின்னர் மஞ்சள்-பச்சை அல்லது பச்சை-கருப்பு நிறத்தில் மாறும்.

● தொற்று பொதுவாக இனப்பெருக்க மற்றும் பழுக்க வைக்கும் நிலைகளில் ஏற்படுகிறது. பூங்கொத்தில் சில தானியங்களைப் பாதித்து மீதமுள்ளவை ஆரோக்கியமாக இருக்கும்.

**நோய் வளர்ச்சிக்கு சாதகமான நிலைமைகள்**

● மழை மற்றும் அதிக ஈரப்பதம்.

● அதிக நைட்ரஜன் உள்ளடக்கம் கொண்ட மண்ணின் இருப்பு.

● தாவரத்திலிருந்து தாவரத்திற்கு வித்திகளைப் பரப்புவதற்கு காற்றின் இருப்பு.

● ஸ்க்லரோஷியா மற்றும் கிளமிடோஸ்போர்களாக அதிகப் படியான குளிர்கால பூஞ்சைகளின் இருப்பு.

● நெல் பயிரின் பூக்கும் நிலை.

**மேலாண்மை உத்திகள்**

**தடுப்பு முறைகள்**

● ஆரோக்கியமான பயிரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நோயற்ற விதைகளைப் பயன்படுத்துதல்.

● கார்பென்டாசிம் 2.0 கிராம்/கிலோ விதைகளுடன் விதை நேர்த்தி செய்தல்.

● பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்.

● தழைச்சத்தை பிரித்து பயன்படுத்துவது பரிந்துரைக்கப் படுகிறது.

● பாதிக்கப்பட்ட தாவரக் குப்பைகளை அகற்றி முறையாக அப்புறப்படுத்துதல்.

**பாரம்பரிய கட்டுப்பாட்டு முறைகள்**

● பயிர் கட்டுப்பாட்டு முறைகளில், நோயைக் குறைக்க பாதிக்கப்பட்ட தாவரங்களிலிருந்து வைக்கோல் மற்றும் வைக் கோலை அழிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

● இந்தியாவில் நோய் எதிர்ப்பு சக்தி அல்லது சகிப்புத்தன்மை கொண்டதாகக் காணப்படும் வகைகளைப் பயன்படுத்தவும்.

● தாவரங்கள் ஈரமாக இருக்கும்போது வயல் நடவடிக்கை களைத் தவிர்க்கவும்.

● தாமதமாக நடப்பட்ட பயிரைக் காட்டிலும் ஆரம்பத்தில் நடப்பட்ட பயிரில் குறைவான கறை படிந்த பந்துகள் இருக்கும்.

● அறுவடை நேரத்தில், நோயுற்ற தாவரங்கள் அகற்றப்பட்டு அழிக்கப்பட வேண்டும், இதனால் ஸ்க்லரோட்டியா வயலில் விழாது. இது அடுத்த பயிருக்கு முதன்மை இனோகுலமைக் குறைக்கும்.

● மாற்று புரவலன்களை அகற்ற வயல் வரப்புகள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

● அதிகப்படியான நைட்ரஜன் உரங்களைப் பயன்படுத்து வதைத் தவிர்க்க வேண்டும்.

● ரபி பருவத்தில் நோய் தாக்கத்தை தொடர்ந்து கண் காணித்தல் மிகவும் அவசியம்.

● வைக்கோல் மற்றும் வைக்கோலை முறையாக அழித்தல்.

**வேதியியல் முறைகள்**

● பூஞ்சை இலை மற்றும் பால் படிதல் நிலைகளில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகோன சோல் 1.0 மிலி/லிட்டர் தெளிப்பது பூஞ்சை தொற்றைத் தடுக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கார்பென்டாசிம் 2.0 கிராம்/கிலோ விதைகளுடன் விதை நேர்த்தி செய்தல்.

● கன்றுகள் முளைக்கும் மற்றும் பூக்கும் முன் நிலைகளில், ஹெக்ஸாகோனசோல் @ 1 மிலி/லிட்டர் அல்லது குளோரோத்த லோனில் 2 கிராம்/லிட்டர் தெளிக்கவும்.

● நோய் மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளில், கேப்டான், கேப்டாஃபோல், ஃபென்டின் ஹைட்ராக்சைடு மற்றும் மான்கோசெப் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நோய் வித்துக்கள் முளைப்பதைத் தடுக்கலாம்.

● கன்றுகள் முளைக்கும் மற்றும் பூக்கும் முன் நிலைகளில், கார்பென்டாசிம் பூஞ்சைக் கொல்லி மற்றும் காப்பர் அடிப்படை பூஞ்சைக் கொல்லியைத் தெளிப்பதன் மூலம் நோயை திறம்பட கட்டுப்படுத்தலாம்.

தகவல் : ம.பானுப்பிரியா, Email : banumalai1996@gmail.com, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சிறுதானிய உணவுத் திருவிழா நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்




திருச்சி, மார்ச் 9

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் விவசாயத் துறை இறுதி ஆண்டு RAWE (Rural Agricultural Work Experience) மாணவிகள் சார்பில் சிறுதானிய உணவுத் திருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ADA மேடம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சிறுதானியங்களின் முக்கியத்துவம், அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பு, உடல்நல நன்மைகள் மற்றும் இன்றைய வாழ்க்கை முறையில் சிறுதானிய உணவுகளின் அவசியம் குறித்து விரிவாக விளக்கினார். மாணவிகள் சிறுதானியங்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பல்வேறு உணவுகளை பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றின் தயாரிப்பு முறைகள் மற்றும் ஆரோக்கிய பயன்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

மேலும், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சிறுதானிய உணவுகள் வழங்கப்பட்டு, சிறுதானியங்களை தினசரி உணவில் சேர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த சிறுதானிய உணவுத் திருவிழா, ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளைப் பற்றிய அறிவை பொதுமக்களிடம் பரப்புவதிலும், விவசாயம் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்காற்றியது.



# நிற வண்ண அட்டை பற்றி எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 9

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், வாழவனந்தான் கோட்டையில் உள்ள விவசாயிகளிடம் (LCC) நிற வண்ண அட்டை பற்றி விளக்கம் அளித்தனர்.

**பயன்பாடு**

நெல் பயிரில் நைட்ரஜன் உரத் தேவையை அறிய, மண்ணைப் பரிசோதனை செய்யாமல், இலை நிறத்தை அட்டையுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்கலாம்.

நன்மைகள்

தேவையற்ற உரப் பயன்பாட்டைக் குறைக்கிறது, செலவைக் குறைக்கிறது, மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிறது.

# இடத்திற்கேற்ற ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 9

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், வாழவனந்தான் கோட்டையில் ( SSNM ) இடத்திற்கேற்ற ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி விளக்கம் அளித்தனர்.

**SSNM–ன் முக்கிய அம்சங்கள்**

**துல்லியமான உர மேலாண்மை :** மண்ணில் உள்ள சத்துக்களின் அளவு மற்றும் பயிருக்குத் தேவையான அளவு (N, P, K) கணக்கிடப்படுகிறது.



**வளங்களை பாதுகாத்தல் :** தேவையற்ற உரம் பயன்பாடு குறைக்கப்பட்டு, செலவு மிச்சமாகிறது.

**உயர் மகசூல் :** பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப ஊட்டச்சத்து கிடைப்பதால், மகசூல் மற்றும் தரம் உயர்கிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு :** உரங்கள் அடித்துச் செல்லப்படுவது (Leaching) குறைக்கப்படுகிறது.

